# இராஜகுல தீபிகை

இராஜகுல சமூக மேம்பாட்டினைக் கருதி தமிழ்நாடு
க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கத்தினரால்
வெளியிடப்படும் தமிழ் பத்திரிகை

## க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம்

தமிழ்நாடு

1985 — ஜனவரி வெளியீடு

BEST COMPLIMENTS FROM

*

# ROLEX CINE FURNITURES



*Manufacturers of :*

**CINEMA AUDITORIUM FURNITURERS**

*Proprietor :*

**'Saluvam' G. PADMANABA RAJU**

65-F, RAJA COLONY,

BEEMANAGAR

TIRUCHIRAPALLI-620 001

TAMIL NADU

Phone : 28010

# ஆசிரியர் அறிக்கை

பேரன்புடைய சகோதர, சகோதரிகளே! வணக்கம்.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்கத்தின் பத்திரிகையான ''இராஜகுல தீபிகை'' சுமார் முப்பது ஆண்டுகளாக வெளி வராமல் இருந்தது. அது போலவே நமது சமுதாய சங்கமும் செயல்படாமல் இருந்தது. தற்சமயம் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையின் காரணமாக நமது சங்கம் பல இடங்களில் ஏற்பட்டு செயல்பட்டு வருகிறது. பல இடங்களில் சங்கங்கள் அமைக்க மாநில அமைப்பாளர்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். இந்த நிலையில் நமக்கென வெளி வந்து கொண்டிருந்த ஒரே பத்திரிகையான இராஜகுல தீபிகையை மீண்டும் நாங்கள் இந்த ஆண்டில் வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறோம்.

இதில் சில குறைபாடுகள் இருக்கலாம். அப்படி இருப்பின் முதல் முறையாக பல ஆண்டு இடைவேளைக்குப்பின் தீபிகை வெளி வருவதால் தயவு செய்து மன்னிக்கக் கோருகிறேன். அக்குறைகளை எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால் நிவர்த்தி செய்துக் கொள்ள சவுகரியமாக இருக்கும். பின்னாட்களில் இது ஒரு சிறந்த பத்திரிகையாக எல்லோராலும் பாராட்டும் வண்ணம் வெளிவரும் என்று உறுதி கூறுகிறேன். இப்பத்திரிகை நமது இனத்தவரின் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இருக்க வேண்டும் என்பதே எங்கள் ஆவல்.

தீபிகைக்கு செய்திகள் அனுப்ப விரும்புவர்கள்

ஜி. ராமகிருஷ்ணன் பி. ஏ., பி. எல்.
5வது மாடி,
35, மலையபெருமாள் தெரு, சென்னை-600 001

என்ற விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன். உங்களனைவரது ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற எண்ணத்தில் தொடர்ந்து செயலாற்ற விருப்பமுடன் இப்பணியை ஏற்றுக் கொண்டுள்ளேன்.

தங்கள்
M. R. சீனிவாசராஜு
ஆசிரியர்

## நமது சங்கம் பற்றிய முக்கிய செய்திகள்

பேரன்புடையீர்,

நமது சங்கம் 1928-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. பலருடைய பெரும் முயற்சியால் தொடர்ந்து சங்கம் வளர்ந்து கொண்டு வந்து, 1940-ம் வருஷத்தில் பழனியில் மகாநாடு சிறப்பாக நடைபெற்றது. அதன் பின் தொடர்ச்சியாக கோயமுத்தூர், சேலம், ஆத்தூர், திருச்சி, ஸ்ரீரெங்கம், திருச்சி வட சங்கந்தி, பாபநாசம், சமயபுரம் முதலான இடங்களில் திரு J. R. ரெங்கராஜு, நாகை திரு நாராயணசாமிராஜு, கெங்குவார்பட்டி திரு கந்தசாமிராஜு, திரு K. R. சித்தராஜு, திரு S. N. நரசிம்மராஜு, திரு M.R.V. ராஜு, திரு P. ராமசாமிராஜு, திரு A.K.D. பலராமராஜு, திரு கே. டி. ஆர். கோபாலகிருஷ்ணராஜு, திரு R. நாராயணசாமிராஜு ஆகியோரின் தலைமையில் சிறப்பாக நடந்தது. மேலே குறிப்பிட்ட பத்து ஆண்டுகளில் புதுக்கோட்டை திரு S. அய்யல்ராஜு அவர்கள் செயலாளராகவும், புதுக்கோட்டை திரு புருஷோத்தமராஜு அவர்கள் இணைச் செயலாளராகவும் இரண்டு வருடங்கள் பணியாற்றினர். பின்னர் தொடர்ந்து வந்த எட்டு வருடங்களுக்கும் கிருஷ்ணகிரி திரு K. G. அனுமந்தராஜு அவர்கள் செயளாலராகவும், சேலம் திரு S. N. முனுசாமிராஜு அவர்கள் இணைச் செயளாலராகவும் சிறப்பாக பணியாற்றினர். ஆத்தூர் திரு A. C. சின்னம்மாராஜு அவர்கள் பொருளாளராக தொடர்ந்து எட்டு ஆண்டுகள் பணியாற்றி உள்ளார்.

மதுரை, ராமநாதபுரம், பாளையங்கோட்டை, தஞ்சாவூர், திருச்சி, சமயபுரம், ஸ்ரீரெங்கம், ஆத்தூர், சேலம், கிருஷ்ணகிரி, காரைக்குடி, கோயம்புத்தூர், சைதாப்பேட்டை, திருப்பத்தூர் (வ. ஆற்காடு) முதலிய இடங்களில் கிளைச்சங்கங்கள் சிறந்த முறையில் செயல்பட்டு வந்தன.

அப்பொழுது ஒன்பது போஷகர்களும், அறுபது ஆயுள் சந்தா உறுப்பினர்களும், சுமார் தொள்ளாயிரத்து அறுபது அங்கத்தினர்களும் இருந்தனர்.

நமது இராஜகுலதீபிகைக்கு முதலில் J. R. ரெங்கராஜு அவர்களும், பின் S. N. நரசிம்மராஜு அவர்களும், அதற்கு பின் திரு M. R. சீனிவாசராஜு அவர்களும், திரு மா. வரதராஜன் அவர்களும் ஆசிரியராக இருந்து பணியாற்றி உள்ளார்கள்.

தொகுத்தளித்தவர் M. R. சீனிவாசராஜு

# அறிவிப்புகள்

## திருமணச்செய்திகள்

ஆண், பெண்களுக்கு வரன்வேண்டுவோர் — முக்கிய தகவல்களுடன் (பெயர் — வயது — பெற்ருேர்கள் பெயர் — வேலை — சம்பளம் போன்றவை) செய்திகள் அனுப்பி வைத்தால் தீபிகையில் பிரசுரிக்கப்படும்.

## வேலை வாய்ப்புகள்

நம் இனத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள், மற்றும் வேலை வாய்ப்பை அளிக்கக் கூடிய நிலையில் உள்ளவர்கள் கூடுமானவரை அனைத்து வேலைகளுக்கும் நம் இனத்தவர்களையே அமர்த்திக் கொள்ளுதல் வேண்டும். வேலைக்கு ஆள் தேவைப்படும் பட்சத்தில் எது போன்ற தகுதி உடையவர்கள், என்ன மாதிரியான வேலைக்கு தேவை என்றும், ஊதியம் எவ்வளவு கொடுக்கலாம் என்றும் தெரியப்படுத்தினுல் அவைகளை தீபிகையில் பிரசுரிக்கப்படும். அதுபோல படித்து வேலையில்லாமல் இருப்பவர்களும் முழுத் தகவல்களை அனுப்பினுல் தீபிகையில் பிரசுரிக்கப்படும்.

## கல்வி சம்மந்தமான உதவி

ஒவ்வொரு ஊரிலும் வசதியான நிலையில் உள்ள நம் இனத்தவர்களும் சங்கங்களும் வசதியற்ற நிலையில் உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்க்கவும், புஸ்தகம், சீருடை போன்றவற்றை வாங்கிக் கொடுக்கவும், உதவும்படி கேட்டுக் கொள்கிருேம்.

---

இராஜகுல தீபிகை பத்திரிகையை வெளி கொணர திரு இந்தர்சென்ராஜு, திரு M. R. சீனிவாசராஜு, திரு மா. வரதராஜு திரு G. ராமகிருஷ்ணராஜு ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

---

# அறிவிப்புகள்

## திருமணச்செய்திகள்

ஆண், பெண்களுக்கு வரன்வேண்டுவோர் — முக்கிய தகவல்களுடன் (பெயர் — வயது — பெற்ரோர்கள் பெயர் — வேலை — சம்பளம் போன்றவை) செய்திகள் அனுப்பி வைத்தால் தீபிகையில் பிரசுரிக்கப்படும்.

## வேலை வாய்ப்புகள்

நம் இனத்தைச் சேர்ந்த தொழிலதிபர்கள், மற்றும் வேலை வாய்ப்பை அளிக்கக் கூடிய நிலையில் உள்ளவர்கள் கூடுமானவரை அனைத்து வேலைகளுக்கும் நம் இனத்தவர்களையே அமர்த்திக் கொள்ளுதல் வேண்டும். வேலைக்கு ஆள் தேவைப்படும் பட்சத்தில் எது போன்ற தகுதி உடையவர்கள், என்ன மாதிரியான வேலைக்கு தேவை என்றும், ஊதியம் எவ்வளவு கொடுக்கலாம் என்றும் தெரியப்படுத்தினால் அவைகளை தீபிகையில் பிரசுரிக்கப்படும். அதுபோல படித்து வேலையில்லாமல் இருப்பவர்களும் முழுத் தகவல்களை அனுப்பினால் தீபிகையில் பிரசுரிக்கப்படும்.

## கல்வி சம்மந்தமான உதவி

ஒவ்வொரு ஊரிலும் வசதியான நிலையில் உள்ள நம் இனத்தவர்களும் சங்கங்களும் வசதியற்ற நிலையில் உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்க்கவும், புஸ்தகம், சீருடை போன்றவற்றை வாங்கிக் கொடுக்கவும், உதவும்படி கேட்டுக் கொள்கிரேம்.

---

இராஜகுல தீபிகை பத்திரிகையை வெளி கொணர திரு இந்தர்சென்ராஜு, திரு M. R. சீனிவாசராஜு, திரு மா. வரதராஜு திரு G. ராமகிருஷ்ணராஜு ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

---

# க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம்

## தமிழ்நாட்டின் நிர்வாகிகளின் பொறுப்பும் முகவரியும்:

தலைவர் :

திரு. M. இந்தர்சென்ராஜு
28, அருணஜலபுரம் 2வது தெரு, அடையார்,
சென்னை-600 020. போன் எண்-412724

துணைத் தலைவர்கள் :

திரு. S. R. சுப்ரமணியராஜு
25, M. K. P. காலனி, கணபதி-அஞ்சல்,
கோயமுத்தூர்-6

திரு. G. ராமசாமிராஜு
48, கூடல் அழகர் பெருமாள் கோயில் தெரு, மதுரை-1

செயலாளர் :

திரு. G. ராமகிருஷ்ணராஜு B. A., B. L. வழக்கறிஞர்,
38, ஐ. பி. கோவில் வடக்குத் தெரு, விஜயபுரம்-அஞ்சல்
திருவாரூர்-610 001. போன் எண் : 2668

இணைச் செயலாளர்கள் :

கலைமாமணி திரு. மா. வரதராஜன் B. A., D. Litt.
7, ராமசாமி மேஸ்திரி தெரு, திருவல்லிக்கேணி
சென்னை-600 005

திரு. V. ராமதாஸ்ராஜு
2927, கீழ 4ம் வீதி, புதுக்கோட்டை

பொருளாளர் :

திரு M. R. S. ராஜு
43, அப்பர்சாமி கோவில் தெரு, மைலாப்பூர் சென்னை-4

## மாவட்டப் பிரதிநிதிகள் :

புதுக்கோட்டை :

திரு. S. மனோகர் ராஜு
C/o இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, புதுக்கோட்டை

சேலம் :

திரு. A. C. தர்மராஜு
இளநிலை பொறியாளர், 41, சோம சுந்திரபுரம்
பவானி - அஞ்சல், பெரியார் மாவட்டம்

கோயமுத்தூர், ஈரோடு, நீலகிரி :

திரு. V. பாலகிருஷ்ணராஜு
1-A நடராஜ தேவர் தெரு, ராமசந்திரபுரம் - அஞ்சல்,
திருச்சி ரோடு, கோயமுத்தூர் - 641 045

மதுரை : திரு. R. சுந்தரராஜு
49, ராஜேஸ்வரி பவனம், ரத்திராபுரம், மதுரை - 11

திருச்சி : திரு. M. R. நாராயணராஜு
C-144, 6வது குறுக்குத்தெரு, தில்லை நகர், திருச்சி-18
போன் எண் : 24195

திரு. G. பாண்டுரெங்கன்
64, பட்டாபி ராமன் தெரு, தென்னூர், திருச்சி-17

வடஆற்காடு :

திரு. A. V. ஷண்முகராஜு B. A., B. L., வழக்கறிஞர்
4-B, தியாகராஜபுரம், வேலூர்-1 போன் எண் : 22221

தஞ்சாவூர் :

திரு. K. ராமராஜு
மெயின் ரோடு, பெரப்படி, கண்டரமாணிக்கம் - அஞ்சல்
கும்பகோணம் - தாலுக்கா

சென்னை :

திரு. C. G. ஆனந்தராம்ராஜு
7, சின்னசாமி ராஜா தெரு, அகரம், சென்னை - 600 082

செங்கற்பட்டு :

திரு G. ராமானுஜராஜு
171, கண்ணப்பமேடு காம்பவுண்டு,
கும்மிடிப்பூண்டி - அஞ்சல், செங்கற்பட்டு - மாவட்டம்

தென்னாற்காடு :

திரு. M. ஆனந்தராஜு B.A.,
மாரியம்மன் கோவில் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர்

இதில் பிரதிநிதிகள் குறிப்பிடப் படாத மாவட்டங்களுக்கு பிரதிநிதியாக இருந்து செயலாற்ற விருப்பம் உள்ளவர்கள் தயவு செய்து மாநில செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

இங்ஙனம்

G. ராமகிருஷ்ணன்
மாநில செயலாளர் தமிழ்நாடு

# இராஜகுல தீபிகை

அன்புடையீர் !

வணக்கம். நமது தமிழகத்தில் உள்ள அனைத்து ஜாதியினரும் தங்களுக்கென ஒரு சங்கத்தை அமைத்து திறம்பட செயல்பட்டு வருகின்ற தருணத்தில் நமது க்ஷத்திரிய ராஜுக்களும் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் அமைத்தால் நம் இன மேம்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் உறுதுணையாக இருக்கும் என்ற நல்லெண்ணத்தில் 2- 9- 1984 அன்று சென்னையில் நடைபெற்ற சென்னை & செங்கற்பட்டு மாவட்ட க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கத்தில் முடிவு எடுத்து 6- 9- 1984 தேதியிட்டு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின்படி 7- 10- 1984 அன்று சென்னையில் நடை பெற்ற கூட்டத்தில் க்ஷத்திரிய ராஜுக்கள் சங்க மாநில அமைப்பு அமைக்கப் பட்டது. [இச்சங்கம் நீண்ட இடைவேளைக்குப் பின்பு மீண்டும் ஆரம்பிக்கப் பட்டு இருமாதங்களே ஆகியுள்ள நிலையிலும், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மாவட்டங்களில் மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்த ஏற்பாடுகளை செய்து வருகிறது. ஒரு மாவட்டத்தில் உள்ளவர்கள் மற்ற மாவட்டங்களில் என்ன நடக்கிறது, மாநில அளவில் என்ன நடக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளவும் சமுதாயத்தில் முன்னேறவும், வேலை வாய்ப்பு, கல்விவசதி, திருமண தொடர்பு கொள்ளுதல் போன்ற உதவிகளை பெறவும் ஒரு பாலமாக அமையக் கூடிய நம் சமுதாயத்திற்கென தனிப்பட்ட பத்திரிக்கையாக "இராஜகுலதீபிகை" என்ற பத்திரிகையை மீண்டும் வெளிக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு கிராமத்திலும் நமது இனத்தை சேர்ந்தவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று நாங்கள் கண்டறிந்து தொடர்பு கொள்ள இயலாது. எனவே, ஒவ்வொரு ஊரிலும் உள்ளவர்கள் ஊர் அளவில் அமைப்புகளை ஏற்படுத்தி, தாலுக்கா, மற்றும் மாவட்ட அளவில் அமைப்புகளை ஏற்படுத்த அங்கங்கு உள்ள நம் இனத்தைச் சேர்ந்தவர்கள் சீரிய முயற்சிகளை எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

இந்த அமைப்புக்களை யெல்லாம் அமைக்க இனியும் நீங்கள் கால தாமதிக்கக் கூடாது. ஏனெனில் வெகுவிரைவில் மாநில அளவில் மாநாடு ஒன்றைக் கூட்ட எண்ணி இருக்கிறோம். அக் கூட்டத்தில் நமது கோரிக்கைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு தக்க முயற்சிகளை மேற்கொள்ள உள்ளோம். எனவே நாங்கள் உங்களுக்கு உதவுவதற்குதயவு செய்து எங்களுக்கு

ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம். விழித்துக் கொள்ளுங்கள். ஒன்றுபடுங்கள். உயர்படுங்கள். உயர் பெறுவோம். வாழ்க க்ஷத்திரிய ராஜுக்கள்.

இப்படிக்கு
ஜி. ராமகிருஷ்ணராஜு
மாநில செயலர்

7-1-85

## துணை விதிகள்

| | | |
|---|---|---|
| 1. | சங்கத்தின் பெயர் : | க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம் |
| 2. | சங்க பதிவு அலுவலகம் : | 28, 2வது தெரு, அருணாசலபுரம் அடையார், சென்னை-20. |
| 3. | சங்க அமைப்பு நாள் : | 31-7-84 |
| 4. | சங்க பதிவு மாவட்டம் : | தென் சென்னை மாவட்ட பதிவாளர், தென் சென்னை, சென்னை-35. |
| 5. | சங்க அலுவலக நேரம் : | காலை 8 முதல் 10 மணி வரை<br>மாலை 6 முதல் 8 மணி வரை |

6. சங்கத்தின் நோக்கங்கள் :

1) க்ஷத்திரிய ராஜுக்கள் இனத்தினரை ஒன்று சேர்த்து அவர்களின் உயர்வுக்காகவும், பொதுவாக சமுதாயத்திற்கு சேர்த்து உடமைகளை நன்முறையில் ஆற்ற வேண்டியது.

2) ஷை இனத்தினரின் கல்வி மற்றும் தொழில் அபிவிருத்திக்கு அனைத்து வழிகளிலும் உதவுதல்.

3) வரதட்சணை இல்லாமல் ஷை இனத்தில் திருமணங்கள் நடத்தி வைப்பது.

4) அரசியல் சார்பு இல்லாமல் பொதுமக்கள் அனைவர்க்கும் இயற்கையால் விளையும் இன்னல்களின் போது எல்லா வகையிலும் உதவுதல்.

5) ஏழைகளுக்கும், முதியோர்க்கும் இலவசமாக கல்வி கற்றுக் கொடுப்பது.

6) ஷை இனத்தினருக்கு கூட்டுறவு முறையில் தொழில்களை சங்கத்தின் நிதியிலிருந்து ஏற்படுத்தி உதவுதல்.

7) ஷை இனப் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கு வழி வகுப்பது.

8) ஷ இனத்தின் இளைஞர்களுக்கு கல்வி கற்கவும், வேலைகள் பெறுவதற்கு உதவிகளும் செய்வது கல்வி கற்பதற்கு இளை ஞர்களுக்கு இடவசதி செய்து பொருள் உதவிகளும் சங்கத்தின் நிதியிலிருந்து செய்தல்.

9) நமது இனம் கல்வியிலும் பொருளாதார நிலையிலும் பின்தங்கி யிருப்பதால் பிற்பட்டோர் வகுப்பில் அரசாங்க பதிவுகளில் சேர்ப்பதற்கான முயற்சிகள் செய்தல்.

10. வழக்கு : சங்கத்தின் மீதோ அன்றி சங்கத்தால் தொடுக்கப் படும் எல்லா நீதிமன்ற நடவடிக்கைகளை தலைவரின் பெய ரால் நடத்தப்படும்.

11. அ. தலைவர் : சங்க அலுவல் சம்பந்தமாக ஆணைகள் வழங்க சங்கத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இவர் சங்கத்தின் எல்லா கூட்டங்களுக்கும் தலைமை தாங்குவார்.

ஆ. துணைத்தலைவர் :

தலைவர் ஊரில் இல்லாத போது தலைவரின் வேலைகளை துணைத் தலைவர் ஏற்று நடத்த கடமைப்பட்டவர்.

இ. செயலாளர்

1. இச் சங்கத்தின் தலைமை நிர்வாகியாவார்.
2. பொதுக்குழு கூட்டத்தை கூட்டவும் நிர்வாகக்குழு கூட்டம் கூட்டவும் இவருக்கு அதிகாரம் உண்டு.
3. சங்கத்தின் மூலமாக நடைபெறும் எல்லா கூட்டங்களையும் நடத்தவும் தள்ளி வைக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு.
4. கூட்டம் நடத்த அறிவிப்பு செய்வதும் கூட்டத்தில் கொண்டு வரப்படும் தீர்மானங்களை பதிவு செய்வதும் இவரது கடமை யாகும்.
5. சங்க அலுவலை கண்காணிக்க இவர் கடமைப்பட்டவர் அனைத்தும் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருவது செய லாளரின் கடமையாகும்.

---

சென்னை, செங்கற்பட்டு மாவட்ட துணைவிதிகள் இத்துடன் பிரசுரித்திருக்கிறோம். புதிதாக சங்க அமைப்புகள் ஏற்படுத்த உள்ளவர்களுக்கும், பொதுவாக எல்லோரும் தெரிந்துக் கொள்ள வும் உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில் வெளியிட்டுள் ளோம்.

---

6. சங்கத்தில் நடைப்பெறும் நிர்வாகக்குழு கூட்டத்திற்கு தொடர்ந்து மூன்று கூட்டத்திற்கும் வருகை தராத உறுப்பினர் களை விளக்கம் கேட்கவும் அதற்கு அவர் அளிக்கும் பதிலை கமிட்டிக்கு சமர்பித்தலும் செயலாளரின் கடமையாகும்.

7. நிர்வாகக்குழுவால் கொண்டு வரப்படும் விசேஷங்கள் அனைத் தையும் தொடர்ந்து தலைவரின் கவனத்திற்கு கொண்டு வருவது செயலாளரின் கடமையாகும்.

8. சங்கத்தின் நிர்வாகக்குழுவின் பரிசீலனைப்படி குற்றத்திற்கு ஆளான நபர் மீது நடவடிக்கை எடுப்பது செயலாளரின் பொறுப்பாகும்.

9. சங்கத்தின் குழு வளர்ச்சிக்கு செயலாளரின் சேவையே மிக முக்கியம்.

ஈ. துணைச் செயலாளர் :

செயலாளர் தலைமையிடத்தில் இல்லாத காலத்தில் செயலா ளரின் பொறுப்புகள் அனைத்தையும் ஏற்று நடத்துபவர் இவரே.

2. பொருளாளர் :

1. சங்கத்தில் வரும் நிதிக்கும் வரவு செலவு கணக்குகளுக்கும் இவரே முழு பொறுப்பாளராவார்.

2. அங்கத்தினர்களிடமிருந்து வசூலிக்கும் மாத சந்தாவையும் நன்கொடையும் ஒப்புதல் பெறப்பட்ட ரசீது மூலமாகத் தான் வசூல் செய்தல் வேண்டும்.

3. மேற்கூறிய வசூல்களை உதவியாளர்கள் மூலமாக பொருளாளர் வசூல் செய்ய வேண்டும்.

4. வசூல் செய்யப்பட்ட தொகையை 3 தினங்களுக்குள் வங்கியில் செலுத்த வேண்டும். (சங்கத்தின் செலவை முன்னிட்டு ரூ. 100/- (நூறு ரூபாய்) கையிருப்பு வைத்துக் கொண்டு மீதி தொகையை சங்கத்தின் பெயரால் வங்கியில் செலுத்திவிட வேண்டும்).

5. செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட வவுச்சரை பெற்ற பிறகு தான் பணம் வழங்குதல் வேண்டும்.

6. வரவு செலவு கணக்குகளை நிர்வகிப்பதும், கமிட்டியால் கேட்கும் போது தங்களிடமுள்ள கணக்குகளை கமிட்டிக்கு சமர்ப்பிப்பதும் இவரது கடமையாகும்.

7. தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு கணக்குகளை பொதுக்குழு கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

8. சங்கத்தின் பொதுக்குழுவே சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் பரிசீலனை செய்ய உரிய அதிகாரம் பெற்றது.

9. அ. அன்றாட நிர்வாகத்தை நிர்வாகக் கமிட்டியே கவனிக்கும்.

10. குற்றச்சாட்டுக்கு ஆளான அங்கத்தினர்களை நீக்கி வைக்கவும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அங்கத்தினர் பொறுப்பில் இருந்து நீக்கி நிர்வாக குழுவிற்கு அதிகாரம் உண்டு.

11. துணை கமிட்டி அமைக்க நிர்வாகக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

12. நிர்வாகக்குழு கூட்டம் குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படும்.

13. உறுப்பினர்களாகச் சேருவார் விண்ணபத்தை பூர்த்தி செய்து செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

14. இச்சங்க உறுப்பினர்கள் அனைவரும் இச்சங்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே செயல்பட வேண்டும். மீறி நடப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நிர்வாகக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

15. (அ) இச்சங்கத்தின் அங்கத்தினராக விரும்புகிறவர் நுழைவுக்கட்டணமாக ரூ. 1/- மாத சந்தாவாக ரூ. 1/-வருட சந்தாவாக ரூ. 12/ - செலுத்த வேண்டும்.

(ஆ) இச்சங்கத்தில் மாத சந்தாவை செலுத்துவோர் ஒவ்வொரு மாதம் 10ம் தேதிக்குள் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டியது.

(இ) 3 மாதங்கள் தொடர்ந்தாற்போல் சந்தா தொகையை செலுத்தாதவர்கள் சங்கத்தில் குறிபிட்டதிலிருக்கும் நடவடிக்கைகளிலிருந்து தற்காலிகமாக நீக்கப் படுவார்கள் மேலும் அவர்கள் ஓட்டுரிமை அற்றவர்களாகி விடுகிறார்கள்.

ஈ. ஒவ்வொரு விண்ணப்பமும் சங்கத்தில் செயலாளர் அவர்களுக்கு அனுப்பினால் அவைகள் நிர்வாகக் குழுவில் வைத்து பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பதாரர் அங்கத்தினராக தகுதி அற்றவர் என்று தக்க காரணம் காட்டி விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யவும் நிர்வாகக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

உ. வருட சந்தா செலுத்துவோர் சந்தாவை வருடமுடிவில் செலுத்தத் தவறினல் அவர்கள் உறுப்பினர் பட்டியலில் இருந்து தற்காலிகமாக நீக்கப்படுவார்கள்.

16. நிர்வாகக்குழுவின் அபிப்பிராயப்படி நிலுவை சந்தா தொகையை பூராவும் செலுத்தி மீண்டும் சங்கத்தினர்களாக சேர உரிமை உண்டு.

17. சங்கத்தில் நிர்வாகக்குழுவும் மற்ற எல்லா உறுப்பினர்களும் இச்சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே செயல் பட வேண்டும். இல்லாமல் தனிப்பட்ட உரிமையோ சலுகையோ என்று யாருக்கும் கிடையாது.

18. நிர்வாகக்குழு சங்கத்தில் சகல நடவடிக்கைகளை கவனிக்கும் பொறுப்பு பொதுக்குழு உறுப்பினரால் தேர்ந்தெடுக்கப்படும். நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்படும். இக்குழுவானது ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர், ஒரு செயலாளர், ஒரு துணை செயலாளர், ஒரு பொருளாளர், ஒரு கமிட்டி உறுப்பினர், ஒரு ஆலோசகர் ஆக மொத்தம் ஏழு உறுப்பினர்கள் கொண்டது.

19. நிர்வாகக்குழு ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும். தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராத நிர்வாகக்குழு நபர்களை தீர்மானத்தின் மூலம் விளக்கி அவர்களுடைய இடத்தில் கமிட்டி மெம்பர்களில் ஒருவரை நியமித்துக் கொள்ளலாம். கமிட்டி உறுப்பினர்களில் ஒருவர் விலகினால் பொதுக்குழு தான் நியமிக்க வேண்டும்.

20. மேற்படி சங்கத்தின் நிதியாண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையாகும்.

21. இச்சங்கத்தின் அறிக்கைகள், சங்கங்கள் பதிவு சட்டப்படி சம்மந்தப்பட்ட பதிவாளர் வசம் செயலாளர் தயாரித்து தாக்கல் செய்யப்படும்.

22. இச்சங்கத்தின் வரவு செலவுகள் சங்க நிதியாண்டு கடைசியில் தகுதி பெற்ற இரண்டு அல்லது அதற்கு மேற்மட்ட அங்கத்தினர்களால் தணிக்கை விதிப்படி தணிக்கை செய்யப் பட்டோ அல்லது சார்ட்டர்டு அக்கௌண்டண்டு மூலம் தணிக்கை செய்யப்பட்டோ அங்கத்தினர்கள் பார்வைக்காகவும் பொதுக் குழுவின் முடிவிற்காகவும் வைக்கப்படும்.

பொது செயலாளர் மற்றும் பொருளாளரின் இணைந்த கையொப்பத்தின் மூலம் இயக்கப்பட வேண்டும்.

30. சங்க துணைவிதி தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கை (மற்றும் இருப்பு கணக்கு அறிக்கை வேண்டும்.) உறுப்பினர் மனுவினை சங்க பொது செயலாளரிடம் அனுப்பி மேற்படி அறிக்கையின் நகல் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 1/- செலுத்திப் பெறலாம்.

31. சங்கத்தின் சட்டவிதிகள் இச்சங்கத்திற்காக விஸ்தரிக்கப்பட வேண்டிய நிர்பந்தங்கள் ஏற்பட்டு அவைகள் தேவை என்று பட்டால் அவைகளையும் இச்சங்கத்தின் 27 அஃப் 1975 சட்ட விதியின்படி செயல்பட இக்குழு முற்படும். மேற்படி துணைவிதி க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம் துணைவிதியின் உண்மை நகல் என இதன் கீழ் கையொப்பம் செய்துள்ள நாங்கள் உறுதி கூறுகிறோம். எம். இந்திரசென், எம். ஆர். சீனிவாசராஜு, கே. சத்திய நாராயணராஜு, வி. ரகுபதி, ஏ. சத்தியசீலன், ஆர். ஜெயகுமார், ஆர். ஆனந்தகுமார், எம். ஆர். சீனிவாசன். எங்கள் முன்னிலையில் 31-7-84ல் கையொப்பமிடப்பட்டது.

---

## ஒரு வேண்டுகோள்!

நம் சமூகத்தினரின் நலத்திற்காக மாநிலம் முழுவதும் மாவட்டங்களில் சங்கங்கள் ஏற்பட்டுள்ளதை அறிந்து மகிழ்வுறுகிறேன். மாநில அரசிடம் பல முறை நம் சமூகத்தை பின் தங்கிய வகுப்புப் பட்டியலில் சேர்த்து பல சலுகைகளையும் வழங்குவதற்கு முயற்சித்து வருகிறோம். அதற்கு மேலும் சில காலம் ஆகும். ஆனால் அரசாங்க சலுகைகளை மட்டும் எதிர்பார்த்து வாளாயிருக்காது, நம் சங்க உறுப்பினர்களே சங்கத்தின் மூலம் ஒருவர்க்கொருவர் உதவிகள் செய்து கொண்டு முன்னேற்றம் அடைவதும் இன்றியமையாதது ஆகும் என்பதை இதன் மூலம் வலியுறுத்தி, அதற்கான முயற்சிகளில் நம் எல்லா சங்கங்களும் ஈடுபட்டு கல்வி, வேலை வாய்ப்பு, திருமணங்கள் நடத்த பண உதவி முதலியவைகளை முக்கிய நோக்கங்களாக வைத்து பாடுபட வேண்டுமென அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

வி. ரெகுபதி
சென்னை.

23. இந்த சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் ஆண்டு தோறும் மார்ச் மாதம் முடிவில் நடைபெறும்.

24. இந்த சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் ஆண்டு தோறும் ஜெனரல் படி கூட்டப்படும் தேதி அங்கத்தினர்களுக்கு 21 நாட்களுக்கு முன் கூட்டியே கடிதம் நபர் மூலம் அறிக்கை அனுப்பப்படும். கூட்டம் நடக்கும் இடம், கூட்டப்படும் தேதி, கூட்டம் கூட்டப்படுவதன் நோக்கம், துணைவிதியில் மாற்றங்களோ அல்லது நோக்கங்களில் மாறுதல்களோ இருப் பின்அவைகளில் நகலும் அனுப்பி வைக்கப்படும்.

25. நிர்வாகக்குழு வேண்டும் போது அல்லது சங்க உறுப்பினர் களின் 25% உறுப்பினர்களில் கையெழுத்திட கோரிக்கையின் பேரிலோ சிறப்பு பொதுக்குழு கூட்டப்படும். மேற்படி சிறப்பு பொதுக்குழு கூட்டம் கோரிக்கை கிடைக்கப் பெற்ற 30 தினங் களுக்குள் வழக்கமாக 21 நாட்கள் முன்னதாக நோட்டீஸ் நபர் மூலம் கொடுத்து கூட்டப்படும். அவ்வாறு மேற்படி கூட்டம் கூட்டப்படவில்லை எனில் கோரிக்கையாளர்களே மேற் படி சிறப்பு கூட்டத்தை நடத்தி கோரிக்கை சம்பந்தப்பட்ட விஷயமாக தீர்மானம் நிறைவேற உரிமை உள்ளவர்களாவார். இந்த கூட்டத்திற்கு கடிதம் மூலம் நேரில் நோட்டீஸ் சார்வு செய்யப்படும்.

26. பொதுக்குழு கூட்டத்திற்கான கோரம் பாகம் உறுப்பினர்கள் ஆவார்கள். தேவையான கோரம் வரவில்லை என்றால் டிை பொதுக்குழு வேறு ஒரு தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டு அதன் விபரம் அங்கத்தினர்களுக்கு தெரிவிக்கப்படும். தள்ளி வைக்கப் பட்ட பொதுக்குழு மீண்டும் கூடும்போது கோரம் தேவை யில்லை.

27. விசேஷ தீர்மானங்கள் சங்க திட்டங்களை மாற்றவோ, சங்கத்தை கலைக்கவோ சங்க பெயரை மாற்றவோ அவசிய மாகும். அதற்கு ¾ பங்கு உறுப்பினர்கள் வாக்கு அளிக்க வேண்டும்.

28. மேற்படி சங்கத்தின் புத்தகங்கள் மினிட் புத்தகங்கள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குப் புத்தகங்கள் 'பேரேடுகள் சங்கத்தின் இதர புத்தகங்கள்' முதலியவைகளை இச்சங்கத்தின் உறுப்பி னர்கள் அலுவலக நேரத்தில் கட்டணமின்றி பார்வையிடலாம்.

29. சங்கத்தின் நிதி அரசு வங்கி ஒன்றில் சங்கப் பெயரில் சேமிப்பு கணக்கில் வைப்பு செய்யப்படும். மேற்படி கணக்குகளை சங்க

பொது செயலாளர் மற்றும் பொருளாளரின் இணைந்த கையொப்பத்தின் மூலம் இயக்கப்பட வேண்டும்.

30. சங்க துணைவிதி தணிக்கை செய்யப்பட்ட வரவு செலவு அறிக்கை (மற்றும் இருப்பு கணக்கு அறிக்கை வேண்டும்.) உறுப்பினர் மனுவினை சங்க பொது செயலாளரிடம் அனுப்பி மேற்படி அறிக்கையின் நகல் ஒன்றுக்கு கட்டணம் ரூ. 1/- செலுத்திப் பெறலாம்.

31. சங்கத்தின் சட்டவிதிகள் இச்சங்கத்திற்காக விஸ்தரிக்கப்பட வேண்டிய நிர்பந்தங்கள் ஏற்பட்டு அவைகள் தேவை என்று பட்டால் அவைகளையும் இச்சங்கத்தின் 27 அஃப் 1975 சட்ட விதியின்படி செயல்பட இக்குழு முற்படும். மேற்படி துணைவிதி க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம் துணைவிதியின் உண்மை நகல் என இதன் கீழ் கையொப்பம் செய்துள்ள நாங்கள் உறுதி கூறுகிறோம். எம். இந்திரசென், எம். ஆர். சீனிவாசராஜு, கே. சத்திய நாராயணராஜு, வி. ரகுபதி, ஏ. சத்தியசீலன், ஆர். ஜெயகுமார், ஆர். ஆனந்தகுமார், எம். ஆர். சீனிவாசன். எங்கள் முன்னிலையில் 31-7-84ல் கையொப்பமிடப்பட்டது.

---

## ஒரு வேண்டுகோள்!

நம் சமூகத்தினரின் நலத்திற்காக மாநிலம் முழுவதும் மாவட்டங்களில் சங்கங்கள் ஏற்பட்டுள்ளதை அறிந்து மகிழ்வுறுகிறேன். மாநில அரசிடம் பல முறை நம் சமூகத்தை பின் தங்கிய வகுப்புப் பட்டியலில் சேர்த்து பல சலுகைகளையும் வழங்குவதற்கு முயற்சித்து வருகிறோம். அதற்கு மேலும் சில காலம் ஆகும். ஆனால் அரசாங்க சலுகைகளை மட்டும் எதிர்பார்த்து வாளாயிருக்காது, நம் சங்க உறுப்பினர்களே சங்கத்தின் மூலம் ஒருவர்க்கொருவர் உதவிகள் செய்து கொண்டு முன்னேற்றம் அடைவதும் இன்றியமையாதது ஆகும் என்பதை இதன் மூலம் வலியுறுத்தி, அதற்கான முயற்சிகளில் நம் எல்லா சங்கங்களும் ஈடுபட்டு கல்வி, வேலை வாய்ப்பு, திருமணங்கள் நடத்த பண உதவி முதலியவைகளை முக்கிய நோக்கங்களாக வைத்து பாடுபட வேண்டுமென அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

வி. ரெகுபதி
சென்னை.

---

WITH BEST WISHES FROM

**R. VENKATASWAMY**

**CIVIL ENGINEERING CONTRACTOR**

No. 3, Kutchery Lane
Mylapore,
MADRAS - 600 004

Phone : 76203

With Best Wishes From

S
C
O
O
T
E
R
HOUSE

S. K. SREEDHAR
No. 1, CHAMIERS ROAD,
MADRAS-35.
Phone : 453385

# PLEASE SAVE WISELY
# IN
# GOVERNMENT SECURITIES

***FOR DETAILS***

***CONTACT*** :

## Thiru A. VENKATAKRISHNAN

AGENT

L I C OF INDA

NATIONAL SAVINGS,

UNIT TRUST OF INDIA

*Office*

107, Usman Road
T. Nagar, Madras-600017
Phone : 441621

*Residence*

55, Perumal Mudali Street
Royapettah, Madras-600014

## க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம், சென்னை

## அறிக்கை

1. சென்ற 6-11-1983 அன்று நம் இனத்தைச் சேர்ந்த திரு சி. என் கிருஷ்ணபாரதி அவர்கள் ஐ. ஏ. எஸ். நியமனம் பெற்று தமிழ்நாடு செய்தித் துறை இயக்குநராக பதவி உயர்வு பெற்றதை முன்னிட்டு சென்னை நியூஉட்லண்ட்ஸ் ஹோட்டலில் பாராட்டு விழா நடைப்பெற்றது. டி பராரட்டு விழாவினை திரு R. கோபால கிருஷ்ணராஜு, திரு G. V. சோமைய்யாராஜு, திரு கே. சத்திய நாராயணராஜு, திரு எம். ஆர். எஸ். ராஜு, திரு எஸ். ஜகதீசன், திரு அ. சத்தியசீலன், திரு ஜெயக்குமார் ஆகியோர் பெரும் முயற்சிகள் செய்து நடத்தினர். அவ்விழாவிற்கு திரு. இந்திரசென் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினர். பாராட்டுகளுக்கு நன்றி உரை கூறியபோது திரு. கிருஷ்ணபாரதி அவர்கள் நம் இனத்திற்காக மீண்டும் சங்கம் ஒன்றை விரைவில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவ்விழாவில் திரு இந்திரசென் அவர்களும் தம்முடைய இல்லத்திலேயே மாதந்தோறும் அனைவரும் கூடலாம் என்றும் உறுதி கூறினர். டி பாராட்டு விழாவில் நம் இனத்தவர் சுமார் 75 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

2. மேற்படி பாராட்டு விழாவில் கிடைத்த ஊக்கத்தில் சென்ற 1984-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று மாலை மூன்று மணிக்கு தற்காலிகத் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்ட திரு இந்திரசென் அவர்களின் அருணசலபுரம் இரண்டாவது தெரு 28-ம் எண்ணுள்ள இல்லத்தில் சுமார் இருபது பேர் கூடினேம். டி திரு இந்திரசென் தலைமையில் கூடிய டி கூட்டத்தில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதலில் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள நம் இனத்தவரைக் கொண்டு சென்னையில் டி க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கத்தை துவக்க வேண்டியதென்றும், சந்தா விபரங்களையும், இனி ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக் கிழமையில் ஆலோசனைக் கூட்டத்தை டி தலைவரின் இல்லத்தில் நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துணைத் தலைவர்கள், செயலாளர், இணைச்செயலாளர், பொருளாளர், தணிக்கையாளர், ஆலோசகர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

3. டி சங்கத்தின் இரண்டாவது கூட்டம் டி தலைவரின் இல்லத்தில் 5/2/1984 அன்று மாலை 3 மணிக்கு நடைபெற்றது. அதில் சங்கத்திற்கான விதிகள் முதலியவற்றை ஏற்படுத்தி பதிவு

செய்ய வேண்டும் என்று முடிவானது. திருமணக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. வேலை வாய்ப்புக் குழுவும் ஏற்படுத்தப்பட்டது.

4. டி சங்கத்தின் மூன்ருவது கூட்டம் டி தலைவரின் இல்லத்தில் 11-3-84 அன்று மாலை 3 மணிக்கு நடைபெற்றது. விரைவில் சங்கத்தின் பொதுக்குழுக்கூட்டம் நடைபெற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

5. சங்கத்தின் நான்காவது கூட்டம் தலைவரின் இல்லத்தில் 1-4-1984 அன்று மாலை 3 மணிக்கு நடைபெற்றது. டி கூட்டத்தில் சங்கத்தின் நிதி நிலைமை பற்றியும் நிதி சேர்த்திடும் வழி முறைகளும் விவாதிக்கப்பட்டன.

6. சங்கத்தின் ஐந்தாவது கூட்டம் 15-4-1984 மாலை 3 மணிக்கு தலைவரின் இல்லத்தில் டி 29-4-84 அன்று சென்னையில் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தை நடத்த வேண்டிய முறை பற்றி விவாதிக்கப்பட்டது. டி முடிவின் படி 29/4/84-ல் சென்னை தி.நகர். வடக்கு உஸ்மான் சாலையில் உள்ள கீதாஞ்சலி கல்யாண மண்டபத்தில் காலை பத்து மணிக்கு சென்னை சங்கத்தின் தொடக்க விழா ஆரம்பிக்கப்பட்டு மாலை 5 மணி அளவில் முடிவு பெற்றது. டி தொடக்க விழாவிற்கு நம் இனத்தவர் சுமார் 350 பேருக்கு மேல் வந்து கலந்து கொண்டு தலைவர், உதவித் தலைவர்கள், செயலாளர், இணைச்செயலாளர்கள், பொருளாளர், மற்றும் ஒவ்வொரு பகுதிக்குமான பிரதிநிதி ஆகியோரை தேர்ந்தெடுத்தனர். டி தொடக்க விழாவில் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜுக்கள் சத்திரத்தை புதுப்பித்துக்கட்ட வேண்டி திரு. எம். டி. பாஸ்கர் அவர்கள் கோரியபடி நன்கொடைகள் வசூலிக்கப்பட்டு திரு. பாஸ்கரிடம் கொடுக்கப்பட்டது.

7. பின்னர் புதிய செயற்குழுக் கூட்டம் டி தலைவரின் இல்லத்தில் 6-5-84, 3-6-84, 1-7-84, 9-8-84, 2-9-84, 7-10-84, 4-11-84, 2-12-84 மற்றும் 6-1-1985 தேதிகளில் நடைபெற்றது. டி மாநில அளவிலான தற்காலிக குழு 7-10-84 அன்று தலைவரின் இல்லத்தில் ஏற்படுத்தப்பட்டது.

நமது சங்கம் மதுரை மாவட்டம் நத்தம் வட்டத்தைச் சேர்ந்த திரு ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் ஐ. ஏ. எஸ். தேர்வில் வெற்றி பெற்றமைக்கு 15-8-84-ல் ஒரு பாராட்டு விழா கொடுத்தது. மற்றும் சென்னை தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் திரு டி. சீனிவாசன் அவர்கள் சார்பு செயலாளராக பதவிஉயர்வு பெற்ற

தற்கு 23-9-84 அன்று பாராட்டு விழா நடத்தப்பட்டது. 1984-ம் வருடம் ஆகஸ்டு மாதம் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. (பதிவு எண் 197/84)

இப்படிக்கு,

க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கம், சென்னை,

கே. சத்திய நாராயணராஜு
செயலாளர்

---

## சென்னை நகர நிர்வாகக்குழு உறுப்பினர்கள் :

| | | |
|---|---|---|
| தலைவர் : | திரு. | M. இந்தர்சென்ராஜு |
| துணைத் தலைவர்கள் : | ,, | M. R. S. ராஜு |
| | ,, | S. லஷ்மிகாந்தராஜு |
| | ,, | R. கோபாலகிருஷ்ணராஜு |
| | ,, | Dr. S. பாலசந்திரன் |
| | ,, | M. வரதராஜு |
| | ,, | A. K. ராமராஜு |
| செயலாளர் : | ,, | K. சத்தியநாரயணராஜு |
| இணைச் செயலாளர்கள் : | ,, | V. ரகுபதி |
| | ,, | S. ஜெகதீசன் |
| பொருளாளர் : | ,, | A. சத்தியசீலன் |
| உறுப்பினர்கள் : | ,, | R. ஜெயகுமார் |
| | ,, | R. வெங்கடசாமி |
| | ,, | K. அழகர் ராஜு |
| | ,, | Y. N. மாதவராஜு |
| | ,, | C. G. ஆனந்தராமராஜு |
| | ,, | V. V. ராஜு |
| | ,, | V. ஆனந்தராஜு |
| | ,, | A. தசரதராஜன் |
| | ,, | V. பாஸ்கர் |
| | ,, | T. G. வெங்கட்ராமராஜு |
| தணிக்கையாளர் : | ,, | R. ஆனந்தகுமார் |

நிர்வாககுழுவிற்கு வட்டாரவாரியாக உதவி புரிய வட்டக் குழுவினர் செயல்பட்டு வருகின்றனர்,

With best compliments from

# ROYAL INDUSTRIALS

65-A, RAJA COLONY,
BEEMANAGAR,
TIRUCHIRAPALLI - 620 001.
TAMIL NADU
Phone: 28563

*

*Manufacturers of :*

**Modern Cinema Furnitures,**
**Sunbrand Cycle Accessories,**
**Electro-Platers.**

***Famous Suppliers in Cinema Theatre Seats in south India.***

Proprietor

**Saluvam S. R. G VENKATARAMA RAJU**

# PRESIDENT'S APPEAL

Dear Members,

It is a well known fact that all of us who are Kahatriya Rajus are able to promote education of their children and secure Government positions by stating they are of Bhat Raju Community. Although they are educationally and economically backward it is deplorable the Governments assistance and help is not reaching them as Kshatriya Rajus (Many of whom are in poverty line).

While we are agitating for including Kshatriya Raju as Backward Community, we should not let time slip away and wrong decisions taken by the powers to be by mis-guided information reaching them (i.e. Kshatriya Raju are forward both economic and education which is false.

Father of the nation gave concessions and other privilege to backward castes in order to help them come up in level with forward castes and ultimately outlive the need of this prop and initial support.

Keeping this ultimate object of the government in mind we kshatriya Raju's now rufferred as Bhat Raju's request the government of refer Bhat Rajus as Kshatriya Rajus since whatever be the economical moral and spiritual heights we may reach, our social status in Hindu Society cannot be attained without eliminating the inferior status that the name "Bhat Raju" carries with it.

We Kahatriya Rajus will be placed under deep indebtedness to the Government of Tamil Nadu now headed by the revolutionery Chief Minister who is loved by the poor and

down trodden and the saviour of backward communities, by declaring Bhat Rajus as Kshatriya Rajus. By this, it means we will be uplifted both economically and socially.

If however the government cannot decide to effect this reformation at once, it can be done by stages by suffixing "Kshatriya Raju" in brackets after the name Bhat Raju i.e. (Bhat Raju (Kshatriya Raju).

This request being a welfare measure involving no cost to government may kindly be granted, justice established, and earn eternal gratitude and solid support to our beloved Chief Minister and his government, since this reformation will be done during A. I. A. D. M. K. period.

Although society accepts us by the name "Kshatriya Raju", Government policy of helping us only when we are referred to as Bhat Rajus is responsible for perpetuating this ignominy.

We now trust that in response to our collective prayer, government will find it easy to change the name "Bhat Raju" into "Kshatriya Raju" while retaining all the concessions offered to "Bhat Raju" community hitherto.

Thanking you,

Yours faithfully,

(M. INDRA SEN)

*President*

KSHATRIYA RAJU'S ASSOCIATION
TAMILNADU

---

*நகரம், தாலுக்கா, மாவட்ட கூட்டங்கள் நடை பெற்றால் அது பற்றிய விபரங்களையும், எடுக்கப்பட்ட தீர்மானங்களையும், விபரமாக எழுதினால் தீபிகையில் பிரசுரிக்கிறோம்.

---

## அகில இந்திய க்ஷத்திரிய ராஜுக்கள் சங்க மாநாடு பெங்களூர் 1984

அகில இந்திய க்ஷத்திரிய ராஜுக்கள் சங்கத்தின் மகாநாடு 1984-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17 மற்றும் 18 தேதிகளில் சீரும் சிறப்புமாய் பெங்களூரில் நடைப்பெற்றது. ஆந்திரா, கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலிருந்து ஐந்தாயிரம் பேருக்கு மேல் ஆண்களும் பெண்களுமாய் கலந்துக் கொண்டனர். நமது சமூகத்தின் வலிமை என்ன என்பதை அங்கேதான் நம்மால் தெரிந்துக் கொள்ள முடிந்தது.

மேற்படி மகாநாட்டை அப்போதைய கர்நாடக முதல்வர் திரு மாண்புமிகு ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் துவக்கி வைத்து உரை நிகழ்த்துகையில் நமது சமூகத்தினருக்கு வேண்டிய உதவிகளை செய்வதாகவும், பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் நம் சமூகத்தை சேர்ப்பதாகவும், என்ஜினியரிங் கல்லூரி ஆரம்பிக்க இலவசமாக இடம் அளிப்பதாகவும் பலத்த கரகோஷங்களுக்கிடையே கூறினார்கள்.

அடுத்த அகில இந்திய க்ஷத்திரிய ராஜுக்கள் சங்க கூட்டம் ஹைதராபாத் நகரில் நடைபெறும் என்று அறிவித்தார்கள். இது போன்ற கூட்டங்களில் பெரும் அளவில் நாம் கலந்துக் கொண்டு நாம் மாநிலத்தால் வேறுபட்டாலும், இனத்தால், மொழியால் ஒன்று பட்டவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தி முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வெற்றி பெறுவோம்.

---

### நன்றி

இந்த ராஜகுல தீபிகை பத்திரிகையை வெளிக் கொணர உதவிய அனைவருக்கும், மற்றும் விளம்பரம் கொடுத்து உதவிய 1. திரு M. இந்தர்சென்ராஜு 2. திரு K. S. மாதவராஜு 3. திரு G. பத்மநாபரராஜு 4. திரு S. லோகராஜு 5. திரு A. வெங்கடகிருஷ்ணராஜு 6. திரு R. வெங்கிடுசாமிராஜு ஆகியோருக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முதல் வெளியீடே விளம்பர வருமானத்தைக் கொண்டு தான் வெளியிட்டுள்ளோம். எனவே நிறைய விளம்பரங்களைக் கொடுத்து உதவும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

G. ராமகிருஷ்ணராஜு

---

BEST COMPLIMENTS FROM

# BALAJI INDUSTRIALS

*Manufacturers of*

CYCLE ASSESSARIES, SUCH AS CARRIERS, BUMPER, DING-DONG BELL AND SPECIALIST IN BRIGHT ELECTROPLATERS.

PROPRIETOR :

**'Saluvam'**

**G. PADMANABA RAJU**

65 F. Raja Colony,

Beema nagar Tiruchirapalli-620 001.

Tamil Nadu

Phone : 21010

# AN APPEAL TO THE CITIZENS OF TAMILNADU

The best manifestation of beauty and utility in one, and are the meeting points of heaven and earth.

They are useful when alive and equally so when dead.

Everyday hundreds of cars release carbon-monoxide which is deadly poison if the green leaves around you do not purify the air.

Carbon monoxide is a heavy poisonous gas and spreads out at lower levels and poses a great threat to human life. Leaves of the trees feed on this gas and purify the air.

Non-conductors like asbestos do not receive the heat which only means they add heat to the outer environment.

Whereas trees annihilate heat by transforming active energy into latent energy through the mysterious process of "Photo Synthesis"

Again, through the millions of pores called "Stomata" water is evaporated thereby heat in the air is further reduced.

Trees form buffers and annul the sound waves preventing the vibrations spreading into the houses and shops and reduce emotional tension. Dust is also screened away from entering houses.

Cost of electricity in Air conditioning becomes 50% less by inducing a general fall in temperature.

Reflected light from green leaves are a tonic to the retina of the eye since infra red and ultraviolet rays are absorbed by the green leaves and only mild wave lengths in the spectrum are released to the eye.

No Government can govern the country without the co-operation of the people. Even so no tree can be grown without the co-operation of the public.

Please adopt the trees in front of your shop or house or street and greet them every morning. You will be wonderstruck how they respond to your love and earn the silent blessing of these trees which bring you and your family all happiness health and long life.

The enemy of trees are your enemies and deal with them as you deal with criminals.

TREE PLANTER &

LANDSCAPE ARCHITECT

Phone : 412724

Your well wisher

**M. INDRA SEN**

---

நன்றி

இந்த ராஜகுல தீபிகை மாத பத்திரிகையாக வெளிவருவதற்கு ரூபாய் 400-ம் விளம்பரம் மூலமாக ரூபாய் 100-ம் கொடுத்து உதவி செய்த திரு ஆர். வெங்கடசாமி அவர்களுக்கு இந்த சங்கத்தின் சார்பாக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

M. R. ஸ்ரீனிவாசராஜு

உப தலைவர்

---

*மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களின் நிர்வாகிகளது முகவரிகளை அனுப்பி வைத்தால் தீபிகையில் பிரசுரிக்க வசதியாக இருக்கும்.

*வாசகர்களே உங்களது பிரச்சனைகள் சங்கம் மூலமாக தீர்க்கப்படுவதொன்றாயின் உங்கள் பிரச்சனையும், நீங்கள் எழுதி அனுப்பலாம்.

# ஒரு வேண்டுகோள்

மனித சமுதாயத்தின் நிரந்தர நண்பர்களாக உள்ள மரங்களை வரவேற்க வாருங்கள்! மரங்கள் அழகே வடிவாய் இருப்பவை; பயன்படுவதற்கென்றே அமைந்தவை; விண்ணும் மண்ணும் சந்திக்கும் இடங்களாய் இருப்பவை.

மரங்கள் இருக்கும் போது பயன்படுவது போலவே இறந்த பின்னும் பயன்படுகின்றன!

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான உந்து வண்டிகள் வெளியிடும் நச்சுப்புகையான 'கார்பன் மோனக்ஸைடை' உங்களை சுற்றி நிற்கும் மரங்களில் உள்ள பச்சை இலைகள் சுத்தம் செய்கின்றன.

'கார்பன் மோனக்ஸைடு' மிகவும் நச்சுத்தன்மையுடைய ஒரு வாயு. இது தாழ்வான நிலைகளிலேயே பரவி மனித வாழ்வுக்கே அச்சத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால் மரங்களின் இலைகளோ இந்த வாயுவையே உண்டு காற்றைச் சுத்தப்படுத்துகின்றன.

கட்டிடங்களில் நீங்கள் பயன்படுத்தும் 'அஸ்பெஸ்ட்டாஸ்' தகடுகள் வெப்பத்தை வாங்கி உட்கொள்ளாமல் வெளியே சிதற விடுகின்றன; இதனால் வெளியே உள்ள சூழலை மேலும் வெப்ப மடையச் செய்கின்றன. ஆனால் மரங்களோ 'போட்டோ சிந்தசிஸ்' என்ற அற்புதமான முறையில் சுற்றுப்புறச்சுழலில் உள்ள வெப்ப நிலையைப் பெரிதும் தணிக்கின்றன.

மரங்களின் இலைகளில் இருக்கும் இலட்சக்கணக்கான துவாரங்களின் வழியாகத் தண்ணீர் ஆவியாகப் போகிறது. இதனால் காற்றில் உள்ள வெப்பம் குறைகிறது.

மரங்கள் ஒலி அலைகளை நிறுத்தி வைத்து அதனால் ஏற்படும் அசைவுகளை இல்லத்திற்குள் பரவாமல் தடுத்து இல்லத்தில் உள்ளோர் அமைதியாக இருக்க உதவுகிறது.

மரங்கள் சுற்றுப்புற வெப்பத்தைக் குறைப்பதால் குளுகுளு வசதிக்காகச் செலவாகும் மின்சாரம் பாதியாகக் குறைகிறது.

பச்சை இலைகள், சூரியனிலிருந்து வீசும் 'இன்ப்ரா ரெட்' 'அல்ட்ரா வயலெட்' போன்ற கடுமையான ஒளிக்கதிர்களைக் கிரகித்துக் கொண்டு மென்மையான ஒளிக்கதிர்களை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய ஒளிக்கதிர்கள் கண்களுக்கு ஓர் ஊக்க மருந்தாக அமைகின்றன.

மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஓர் அரசும் நாட்டை ஆள முடியாது. அவ்வாறே பொது மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்த ஒரு மரத்தையும் வளர்க்க முடியாது.

தயவு செய்து உங்கள் கடைக்கு முன்போ, இல்லத்திற்கு முன்போ, தெரு ஓரத்திலோ மரங்களை நடுங்கள். நாள் தோறும் காலையில் அவற்றை வாழ்த்துங்கள். உங்கள் அன்பை அவை ஏற்றுச் செயல்படுகின்றன என்பதை நீங்கள் அறியும் போது உங்களுக்கே பெரு வியப்பாய் இருக்கும். உங்களை அந்த மரங்களும் வாழ்த்துகின்றன. அந்த வாழ்த்துக்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் மகிழ்ச்சியையும், நல்ல உடல் வளத்தையும் நீண்ட வாழ்வையும் வழங்குகின்றன.

மரங்களின் பகைவர்கள் உங்களின் பகைவர்கள். கொலைக் குற்றவாளிகளை நடத்துவது போல அவர்களை நீங்கள் நடத்துங்கள்.

பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்தால் சென்னை மாநகரம் முழுவதும் எழில் மிக்க தோட்டத் திருநகர் ஆகிவிடும்; இந்தியாவிலேயே மிகமிக அழகான ஒரு பெருநகரம் தான்தான் என்ற பெருமையை ஈட்டிக்கொள்ளும். எனவே சென்னை மாநகராட்சி செய்ய உள்ள இந்தப் பொதுப்பணிக்கு மரம் நடு பணிக்கு உங்கள் நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் தந்து உதவுங்கள்.

தங்கள் நலம் நாடும்

**எம். இந்திரா சென்,**

தொலைபேசி எண் 412724


## விளம்பர விகிதம்

| | |
|---|---|
| பின் பக்க அட்டை | ரூ. 100 |
| உள் பக்க அட்டை | ரூ. 75 |
| உள் பக்கம் | ரூ. 50 |

*BEST*

*COMPLIMENTS*

*FROM*

M/s MADHAVA RAJU AND ASSOCIATES

**ARCHITECTS, ENGINEERS AND INTERIOR**

**DESIGNERS**

MADRAS - 600 004.

Tel No. 76846

BEST COMPLIMENTS FROM

**Theatre SANGEETHA** (Under Construction)




*Proprietor* : **Shri. S. Lokaraju, M/s, R. Subbaraju Sons,** Tirupur Town, Coimbatore Dt.

*Architect* : **Shri. K. S. Madhava Raju, M/s. Madhava Raju and Associates**
8, First Link Street, C. I. T. Colony, Mylapore, Madras - 600 004.